வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 552/2020

வழக்கு சாட்சி LW2 /PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராகேஷ் | ஜாதி | |
| கணவர்/தந்தை | பாபு | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 28 |

தேதி 27.02.2025

எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் பாடியநல்லூரில் பகுதியில் வசித்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். மேற்படி புகாரானது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 8 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. காவாங்கரை பகுதியில் வேலை செய்து கொண்டிருந்தபோது எனக்கும், வீரராகவன் என்பவருக்கும் தகராறு ஏற்பட்டது. அப்பொழுது கும்பலாக கூடிவிட்டார்கள். எனக்கு தலையில் அடிபட்டுவிட்டது. என்னை யார் அடித்தார்கள் என்று கும்பலில் தெரியவில்லை. நான் சந்தேகத்தின்பேரில் வீரராகவன் பேரில் புகார் அளித்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன் என்றால் ஆமாம். எனது புகாரின்மீது மேல்நடவடிக்கை எதுவும் வேண்டாம் என்றால் ஆமாம். என்னை சமாதானமாக செல்ல யாரும் வற்புறுத்தவில்லை என்றால் ஆமாம். போலீசார் எழுதிய புகாரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம்.

**மறுவிசாரணை இல்லை.**